**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 73** **நாள்: 30.06.2017**

# தகுதி வாய்ந்த வாக்காளர்களை வாக்காளர் பட்டியலில் அதிகளவில் சேர்த்தல் மற்றும் பிழைகளை நீக்கும்பொருட்டு, சிறப்பு பணி நடைபெற உள்ளது என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்

-----

சென்னை மாவட்டத்திற்குட்பட்ட தகுதி வாய்ந்த வாக்காளர்களை வாக்காளர் பட்டியலில் அதிகளவில் சேர்த்தல் மற்றும் பிழைகளை நீக்கும்பொருட்டு வரும் ஜூலை மாதம் 1–ஆம் தேதி முதல் 31–ஆம் தேதி வரை சிறப்பு பணி நடத்த இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. இந்த சிறப்பு பணி அனைத்து மாநிலங்களிலும் நடத்த ஆணையிட்டுள்ளது. எந்த ஒரு வாக்காளரும் விடுபட்டுவிடக்கூடாது என்ற இந்திய தேர்தல் ஆணையத்தின் கருப்பொருளுக்கு இணங்க அதிக அளவில் இளைய வாக்காளர்களை, குறிப்பாக 18 முதல் 21 வயது குழுமத்தை சேர்ந்த வாக்காளர்களை பட்டியலில் சேர்க்க, தற்போது நடைபெறும் தொடர் திருத்த காலத்தை பயன்படுத்திக்கொள்ளுமாறு ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இந்த சிறப்பு பணி தொடர்பாக சென்னை மாவட்டத்தில் பின்வரும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

- கல்லூரி மாணவர்களுக்கு அவர்கள் பயிலும் கல்வி நிறுவனங்களில் 4 மாணவர்கள் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு பயிற்சி அளித்து அவர்கள் மூலம் மாணவர்களை கணினியில் இணையதளம் மூலம் பதிவு செய்துகொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.
- வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் அவர்களுடைய பகுதியில் 01.07.2017 முதல் 31.07.2017 வரை வீடு வீடாக சென்று 18 வயது முதல் 21 வயது (01.01.1999–ஆம் ஆண்டுக்கு முன் பிறந்தவர்கள் அல்லது 01.01.2017 அன்று 18 வயது பூர்த்தி அடைந்தவர்கள்) வரை உள்ள புதிய வாக்காளர் தொடர்பான விசாரணை மேற்கொள்ளும்போது அவருக்கு ஒத்துழைப்பு நல்கி படிவம் 6 பூர்த்தி செய்ய இளம் வாக்காளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.
- மேலும் வரும் 09.07.2017 மற்றும் 23.07.2017 ஆகிய இரு தினங்களில் அனைத்து வாக்குச்சாவடிகளிலும் சிறப்பு முகாம் நடத்தப்பட உள்ளது. அங்கு சென்று படிவம் 6–ஐ பூர்த்தி செய்து தரலாம்.
- மாற்றுத்திறனாளியாக இருந்தால் கவலை வேண்டாம், நீங்கள் கட்டணமில்லா தொலைபேசி எண் 1950–க்கு டயல் செய்து அவர்களின் முகவரியை

தெரிவித்தால் வாக்குச்சாவடி நிலை அலுவலர் உங்கள் இல்லம் தேடி வந்து படிவம் 6–ஐ பூர்த்தி செய்துகொள்வார்.

- மேலும், வாக்குப்பதிவு அலுவலர் / மண்டல அலுவலர் அலுவலகங்கள் (மண்டலம் 4, 5, 6, 8, 9, 10, 13 மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் ஆணையர் அலுவலகங்களில் பூர்த்தி செய்யப்பட்ட படிவம் 6–ஐ தரலாம்.
- பூர்த்தி செய்த படிவம் 6–ஐ அஞ்சல் மூலமாகவும் மேற்படி அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கலாம்.
- வாக்காளராக பதிவு செய்ய http://elections.tn.gov.in/voterservice.aspx என்ற இணையதள முகவரியை பயன்படுத்திக்கொள்ளலாம்.
- தேர்தல் ஆணைய National Voters Service Portal(NVSP) என்ற இணையதளத்தில் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்.
- Google Playstore-ல் “TNElections” என்ற Mobile App-ஐ பதிவிறக்கம் செய்தும் வாக்காளராக பதிவு செய்துகொள்ளலாம்.
- அருகில் உள்ள இ–சேவை மையத்திலும் விண்ணப்பித்துக்கொள்ளலாம்.

இந்த சிறப்புத்திட்டம் தொடர்பாக 29.06.2017 அன்று கூடுதல் மாவட்டத்தேர்தல் அலுவலர் மற்றும் துணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) பெருநகர சென்னை மாநகராட்சி முன்னிலையில் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பங்குபெற்ற கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் இந்த சிறப்பு பணியின்போது மேற்படி அரசியல் கட்சிகள் சார்பாக வாக்குச்சாவடிக்கு ஒரு முகவரை நியமித்து வாக்குச்சாவடி நிலை அலுவலருக்கு ஒத்துழைப்பு அளிக்குமாறும், இறந்த வாக்காளர்களின் பெயர்களை நீக்குவதற்கு தேவையான ஒத்துழைப்பு அளிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டமன்ற பேரவை தொகுதிகளின் வாக்குப்பதிவு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**